பெண்களதும் ஆண்களதும் கலகலவென்ற கதம்ப ஒலியால் அந்தச் சிறிய ஒன்றுகூடல் மண்டபம் அதிர்ந்து கொண்டிருந்தது. அங்கிருந்த அனைவரும் கரிய உடைகள் அணிந்தவர்களாக இருந்தாலும், முகங்களெல்லாம் ஆயிரம் வோல்ற் மின்விளக்குகளைப்



**மேஜர் பாரதி**
**கமலராணி வீரகத்தி**
**(நாகர் கோயில்)**
**பிறப்பு - 1972 . 09 . 30**
**வீரச்சாவு - 1996 . 11 . 11**

போல் ஒளிர்ந்து கொண்டிருந்தன.



# நெஞ்சம் மறப்பதில்லை...

மண்டபத்தில் இருந்த ஒலி- ஒளிப்பதிவுக் கருவிகள், புகைப்படக் கருவிகளெல்லாம் அவர்களை விழுங்கிக் கொண்டிருந்தன.

கலகலப்பை மீறி, இடையிடையே வாசலைப் பார்ப்பதும் பின்னர் கதைப்பதும் சிரிப்பதுமாக இருந்தனர்.

அவர்கள் கரும்புலிகள். தமக்கு எல்லாமுமாக இருந்து நெறிப்படுத்தி அன்பு காட்டி அரவணைத்த அந்தப் பெரும் தலைவனை இறுதியாகச் சந்திப்பதற்குக் காத்திருந்தார்கள்.

கலகலத்த மண்டபமும் 'சட்' டென அமைதியானது. கண்களில் பெருமிதமும் வேதனையும் போட்டியிட கம்பீரமான சின்னப் புன்னகையுடன் தலைவர் வந்தார். விழிகளில் ஒளியோடு நின்ற அந்த நெருப்புகளை நோக்கி வணக்கம் என்றார்.

மீண்டும் கலகலப்பு. மகிழ்ச்சிப் பெருக்கு. கதைக்கிடையில் யாரோ பாரதியை 'சாண்டோ' என்று கூப்பிட, தலைவர் ஏன்என்று வினவினார்.

பாரதியின் மேல் படகுகளை ஏற்றிப் பயன்படுத்தும் பாரவண்டி படகுடன் தவறுதலாக ஏறியதை எல்லோரும் கதைகதையாக அவருக்குச் சொல்ல, அவர் சிரித்தவாறு பாரதியை 'சாண்டோ' என்று தானும் கூப்பிட்டார்.

பாரதி புன்னகைத்தாள்.

வீட்டில் கடைக்குட்டி. செல்லப்பிள்ளை. கதையும் செல்லக்கதைதான். இயக்கத்திலும் அவள் அப்படியே கதைப்பதால், தோழிகள் அவளை 'நயினா' என்றுதான் கூப்பிடுவார்கள்.

தாயும் மகளும் சரியான நெருக்கம். வெளியே போன பாரதி வரக் கொஞ்சம் தாமதமானாலும் தேடிப் போய்விடுவார் அம்மா. ஒருநாள் பாரதி வீட்டுக்கு வரவேயில்லை. தேடித்தேடி கடைசியாக முகாமிற்குப் போய் அழுத அம்மாவிடம்,

"நீங்க அழவே கூடாது அம்மா. நான் உங்களிடம் வரவேணுமெண்டால் நீங்க அழக்கூடாது"

என்று ஆறுதல் சொல்லி அனுப்பிவிட்டாள்.

**பயிற்சி எடுக்கமுன், சிலகாலம் அவள் இடம்பெயர்ந்த தீவக மக்களிடையே அரசியல் வேலை செய்தாள். இடப்பெயர்வு வாழ்வின் அவலங்களை அங்கே அவள் கண்டாள். அந்த மக்களின் கண்ணீர்தான் அவளைக் கரும்புலி ஆக்கியிருக்க வேண்டும்.**

பயிற்சி ஆசிரியர் ஒருமுறை, இவளின் அணியினரை 'சோம்போறிகள்' என்று சொல்லிவிட்டார். அவ்வளவுதான் அன்றிலிருந்து எதிலுமே பாரதியின் அணிதான் முன்னின்றது.

"பாரதியக்கா இல்லாவிட்டால் நாங்கள் இப்பவும் சோம்பேறியாத்தான் இருந்திருப்பம்."

என்று நினைவுகூர்ந்தார், அந்தநேரத்தில் பாரதியின் அணியிலிருந்த **ஆரணி.**

ஆரம்பப் பயிற்சி முடிந்ததும் வெடிமருந்துப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டு அதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டாள். அதுமுடிய நீச்சல், படகோட்டம் என்பவற்றில் ஈடுபட்ட பாரதி ஒரு கலைஞராகவும் இருந்தார். நிகழ்ச்சிகளைத் தயாரிப்பாள். கவிதை எழுவதிலும் பெரும் ஆர்வம் இருந்தது.

"நாங்க ஒரு சண்டை செய்ய வேணும். அதுக்கு 'அலை வேகத் தாக்குதல்' எண்டு பெயர் வைக்க வேணும்"

என்று அடிக்கடி சொல்வாள்.

கிளாலியில் மக்கள் பாதுகாப்புச் சேவையில் ஈடுபட்ட போது, பாரதியின் A.K.L.M.G பல தடவைகள் முழங்கியிருக்கின்றது. **சுகன்யா** படையணியின் பொறுப்பாளராக இருந்து மண்டைதீவுச் சண்டைக்கு ஓட்டியாகச் செயற்பட்டாள். பூநகரி மீதான தவளைத் தாக்குதலின் போது, இவளது படகையும் அருகில் வந்த இன்னொரு படகையும் உலங்கு வானூர்தி தாக்க, எல்லோருமே கடலுக்குள் குதித்து நீந்தத் தொடங்கினார்கள். ஒரு போராளி நீரில் மூழ்கித் தத்தளித்தபடி,

"என்னைக் காப்பாற்றக்கா"

என்று கத்த, திரும்பி நீந்திய பாரதி அவனின் தலையில் ஒரு குத்துவிட்டு, மயங்கியதும் கரைக்கு இழுத்தவாறு நீந்தினாள். பின்னர், கடலில் ஐந்து கடல் மைல் நீச்சல் முடிந்ததும் அவனின் செய்தி பாரதியை வந்தடைந்தது.

"அக்கா உன்னாலதான் நான் இண்டைக்கு இப்பிடியொரு நிலைக்கு வந்திருக்கிறன்."

பின்னர் அவன் முல்லைத்தீவில், **'ஓயாத அலைகள்'** தாக்குதலில் வீரச்சாவடைந்தது பாரதியை உலுக்கிவிட்டது.

1996 இல் நளாயினி படையணியின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட பாரதி 'ஓயாத அலைகளுக்கு ஓட்டியாகச் செயற்பட்டாள்.

படகு ஏற்றும் பாரவண்டி படகுடன் ஏறி உடல் பலவீனமாக இருந்தபோதும், தனக்குரிய வெடிமருந்துப் படகை பிடிவாதமாகக் கேட்டு வாங்கினாள்.

"படகை நான்தான் ஓட்டுவன். என்னோட ஒரு பெண்போராளி வரட்டும்"

என்று பொறுப்பாளரைக் கேட்டாள்.

அவளின் விருப்பப்படியே, மேஜர் மங்கைக்கு அடுத்தாக, வெடிமருந்துப் படகை ஓட்டிய பாரதி, 1996-11-11 அன்று அதிகாலை காரைநகர் கடற்படைத்தளமருகே அதிவேக டோரா பீரங்கிப் படகு மீது மோதினாள். கூடவே இன்னிசையும். ✷